முழுப் பதிப்புரிமையுடையது

**இலங்கை கணக்கீட்டு தொழில்நுட்பவியலாளர் கழகம்**

# AA3 பரீட்சை – 2017 சனவரி

# (AA34) செயன்முறைகள், கட்டுப்பாடுகள் மற்றும் கணக்காய்வு

(Processes, Controls and Audit)

2017-01-21
பிற்பகல்
[1.45 – 5.00]

பக்கங்கள் : 08
வினாக்கள் : 09

- **பரீட்சார்த்திகளுக்கான அறிவுறுத்தல்கள்** (கவனமாக வாசிக்கவும்):

(1) ***அனுமதிக்கப்பட்ட காலம் :*** *வாசிப்புக்கு : 15 நிமிடங்கள்*
*விடையெழுத : 03 மணித்தியாலம்*

(2) ***எல்லா வினாக்களுக்கும் விடை தருக.***

(3) ***விடைகள்*** *உமக்கு வழங்கப்படும்* ***விடைப்புத்தகத்தில்*** *நீர் பரீட்சை எழுத விண்ணப்பித்த* ***அதே மொழியில்*** *மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.*

(4) *சகல செயன்முறைகளையும் கணிப்பீடுகளையும் காட்டுக. நீர் எடுகோள்கள் எதனையும் எடுத்திருப்பின் அவற்றை தெளிவாக குறிப்பிடுக.*

(5) *நிரற்படுத்தப்பட முடியாத கணிப்பான்கள் பயன்படுத்தப்படலாம்.*

(6) ***வினா வினைச் சொற்களின் நிரல்*** *அவற்றின்* ***வரைவிலக்கணங்களுடன்*** *இணைக்கப்பட்டுள்ளது. ஒவ்வொரு வினாவும் ஒரு* ***வினா வினைச் சொல்லை*** *கொண்டுள்ளது. பரீட்சார்த்திகள் வினா வினைச் சொல் நிரலிற் தரப்பட்டுள்ள வரைவிலக்கணங்களின் அடிப்படையில் வினாக்களுக்கு விடையளித்தல் வேண்டும்.*

(7) *100 புள்ளிகள்.*

---

## <u>பிரிவு A</u>

இந்தப் பகுதியிலுள்ள நான்கு (04) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 20 புள்ளிகள்)

### வினா 01

**வரையறுக்கப்பட்ட யுனிவெப் லங்கா (தனியார்) கம்பனியானது** அவுஸ்திரேலியக் கம்பனியான **யுனிவெப் இன்ரர்நஷனலின்** ஒரு துணைக் கம்பனியாகும் (subsidiary). **வரையறுக்கப்பட்ட யுனிவெப் லங்கா (தனியார்) கம்பனி**, **யுனிவெப் இன்ரர்நெஷனலின்** கம்பனி வாடிக்கையாளர்களுக்கு மென்னுறுப்புப் பொதிகளை விருத்திசெய்தலில் ஈடுபட்டுள்ளது.

**வரையறுக்கப்பட்ட யுனிவெப் லங்கா (தனியார்) கம்பனியின்** வியாபாரத்தில் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய மூன்று (03) பொருளாதாரக் காரணிகளையும் இரண்டு (02) தொழில்நுட்பக் காரணிகளையும் **குறிப்பிடுக.**

(05 புள்ளிகள்)

## வினா 02

"**வரையறுக்கப்பட்ட இமொபைல் (தனியார்) கம்பனியானது** செல்லிடத் தொலைபேசிகளை விற்பனைசெய்யும் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. இதன் வியாபாரம் அக மற்றும் புற இடர்களால் தாக்கத்திற்கு உள்ளாவதுடன் கம்பனி இந்த இடர்களை பூரணமாகத் தவிர்க்கமுடியாதுள்ளது."

(A) **வரையறுக்கப்பட்ட இமொபைல் (தனியார்) கம்பனிக்கு** தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய அக இடர்கள் (internal risks) மூன்றினை (03) **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட இமொபைல் (தனியார்) கம்பனியின்** இடர்களைக் குறைப்பதற்கு பயன்படுத்தக் கூடிய இரண்டு (02) நுட்ப (technique) வகைகளை **நிரற்படுத்துக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 03

வழிகாட்டல், மேற்பார்வை மற்றும் மீளாய்வு என்பன தனித்தனிக் கணக்காய்வுகளின் (individual audit) தரக் கட்டுப்பாட்டிற்கு கவனத்திற்கொள்ள வேண்டிய கொள்கைகளும் விதிமுறைகளும் ஆகும். தனியான கணக்காய்வு ஒன்றின் தரக் கட்டுப்பாட்டிற்கு பணிக்கமர்த்தல் பங்காளரே இறுதிப் பொறுப்பாளராவார்.

(A) கணக்காய்வுப் பங்காளர் (Audit partner) வழிகாட்டலின்கீழ் கணக்காய்வு அணி அங்கத்தவர்களுடன் தொடர்பாடல் கொள்ளவேண்டிய மூன்று (03) விடயங்களைக் **குறிப்பிடுக**. (03 புள்ளிகள்)

(B) கணக்காய்வு ஒன்றினை நடத்தும்போது மேற்பார்வையின் கீழ் உட்படுத்தப்பட வேண்டிய இரண்டு (02) தொழிற்பாடுகளைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

## வினா 04

அகக் கட்டுப்பாட்டு முறைமையானது ஒரு நிறுவனம் அதன் நோக்கங்களையும் குறிக்கோள்களையும் நிறைவேற்றுவதற்காக முகாமை அறிமுகப்படுத்துகின்ற செயன்முறைகளைக் குறிக்கின்றது. COSO (Committee of Sponsoring Organizations – அனுசரணை செய்யும் அமைப்புக்களின் குழு) வேலைச் சட்டகத்தின்படி, அகக் கட்டுப்பாட்டு முறைமையொன்றில் ஐந்து கூறுகள் உள்ளன. COSO வின் ஐந்து கூறுகளில் இரண்டு கட்டுப்பாட்டுச் சூழல் மற்றும் கட்டுப்பாட்டுச் செயற்பாடுகள் என்பனவாகும்.

(A) கட்டுப்பாட்டுச் சூழல் என்பதனால் கருதப்படுவது என்ன என **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(B) கட்டுப்பாட்டுச் செயற்பாடுகளில் உட்படுத்தப்பட்ட மூன்று (03) அகக் கட்டுப்பாட்டு வகைகளைக் **குறிப்பிடுக.** (03 புள்ளிகள்)

(மொத்தம் 05 புள்ளிகள்)

பிரிவு *A* முடிவு

## <u>பிரிவு B</u>

இந்தப் பிரிவிலுள்ள மூன்று (03) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 30 புள்ளிகள்)

### வினா 05

AAT அங்கத்தவர்கள், இலங்கை கணக்கீட்டுத் தொழினுட்பவியலாளர் கழகத்தினால் வழங்கப்பட்ட நன்னெறிக்கோவை (Code of Ethics) தேவைப்பாடுகளுக்கு இசைவாக நடந்துகொள்ளவேண்டுமென கேட்கப்பட்டுள்ளனர்.

***நீங்கள் செய்யவேண்டியவை,***

(A) இலங்கை AAT அங்கத்தவர்களுக்கு பிரயோகிக்கக்கூடிய அடிப்படைத் தத்துவங்கள் நான்கு (04) **கூறுக.** (04 புள்ளிகள்)

(B) அடிப்படைத் தத்துவங்களுக்கு இசைவாக இருப்பதற்கு அச்சுறுத்தலாக விளங்கும் கீழ்வரும் அச்சுறுத்தல்களை **விபரிக்குக** :

- (a) சுய நாட்ட அச்சுறுத்தல் (Self-interest threat)
- (b) துணைவலிமை / வாதாடுதல் அச்சுறுத்தல் (Advocacy threat)
- (c) பரிச்சய அச்சுறுத்தல் (Familiarity threat) (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

### வினா 06

***வரையறுக்கப்பட்ட லேட்டஸ்ட் பெஷன் (தனியார்) கம்பனி*** மகளிர் ஆடைகளின் சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. கம்பனியின் வாடிக்கையாளர்கள் பிரதானமாக உயர் வருமானம் பெறும் வகுப்பினராவர். ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை புதிய வடிவமைப்புக்கள் கம்பனியால் சேர்க்கப்படும். அதன் பின்னர் பழைய வடிவமைப்பு ஆடைகள் கழிவு விலையில் விற்கப்படும். இந்தக் கம்பனியானது இரு பிரதான பங்குதாரர்களினால் முகாமை செய்யப்படுகின்றது. 2016 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான கம்பனியின் கணக்காய்வாளர்களான **SP அசோசியேற்ஸ்** கீழ்வருவனவற்றை அவதானித் துள்ளது :

(1) ரூ.50 மில்லியன் பெறுமதியான ஆடைகள் கடந்த ஆண்டிலிருந்து அசையாத (non-moving) உருப்படிகளாக உள்ளன. எனினும் நிதிக் கூற்றுக்களில் இதற்காக ஏற்பாடு செய்யப்படவில்லை. தொக்குகள் கிரயத்தில் மதிப்பிடப்பட்டுள்ளன. அசையாத உருப்படிகளின் நிகர தேறுகைப் பெறுமதி ரூ.20 மில்லியனாக கணக்காளரினால் மதிப்பிடப்பட்டுள்ளது. இந்த மதிப்பீட்டின் நியாயபூர்வத் தன்மை கணக்காய்வாளரினால் சுயாதீனமாகச் சோதிக்கப்பட்டது. அதில் எந்தத் தவறுகளும் கண்டு பிடிக்கப்படவில்லை.

(2) 2016 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான கணக்காய்வுக்குப் பிரயோகிக்கக்கூடிய ஒட்டுமொத்த பொருண்மை மட்டம் (overall materiality level) ரூ. 18 மில்லியனாக மதிப்பிடப்பட்டுள் ளதுடன் அது பொருத்தமான முறையில் கணிக்கப்பட்டிருந்தது.

(3) பங்குதாரர்களின் எதிர்பார்ப்பு, இந்த வியாபாரத்திலிருந்து மாறாத அளவில் பங்கிலாபங்களைப் பெறுவதாகும்.

***நீங்கள் செய்யவேண்டியவை :***

(A) 2016 டிசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான **வரையறுக்கப்பட்ட லேட்டஸ்ட் பெஷன் (தனியார்) கம்பனியின்** கணக்காய்வாளரின் அறிக்கையில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினை **மதிப்பிடுக.** (04 புள்ளிகள்)

(B) ஒவ்வொன்றிற்கும் ஒரு பொருத்தமான உதாரணம் தந்து, "மாற்றப்பட்ட கணக்காய்வு அறிக்கை"யினை (modified audit report) "விடய அழுத்தப் பந்தியுடன்கூடிய கணக்காய்வு அறிக்கை"யிலிருந்து **வேறுபடுத்துக.** (06 புள்ளிகள்)

(மொத்தம் 10 புள்ளிகள்)

## வினா 07

**வரையறுக்கப்பட்ட மொனார்ச் (தனியார்) கம்பனி** சில்லறை வியாபாரத்தில் ஈடுபட்டுள்ளது. ஒரு செயற்றிட்டத்திற்கு நிதியினைப் பெற்றுக்கொள்வதற்காக **மொனார்ச் கம்பனி** முன்னணி வங்கியொன்றுடன் ஒப்பந்தமொன்றினைச் செய்துள்ளது. இந்த ஒப்பந்தப்படி **மொனார்ச் கம்பனி** அரையாண்டிற்கு ஒரு தடவை ஒப்பந்த ஏற்பாடுகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்படும் நிதிக் கூற்றுக்களை வங்கிக்குச் சமர்ப்பித்தல் வேண்டும். நிதிக் கூற்றுக்கள், ஒப்பந்தத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு அமைவாகத் தயாரிக்கப்படல் வேண்டும். இந்த நிதிக் கூற்றுக்கள் கணக்காய்வு செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

எனவே, **மொனார்ச் கம்பனியின்** முகாமையினர் கணக்காய்வு நிறுவனமான **S&S கம்பனியிடம்** உறுதிப்படுத்தற் பணிக்கமர்த்தல் வேலைகளை நடாத்தி இந்த விசேட தேவை நிதிக் கூற்றுக்கள் மீது அறிக்கையொன்றினை வழங்குமாறு கேட்டுள்ளனர்.

***நீங்கள் செய்யவேண்டியது,***

உறுதிப்படுத்தல் பணிக்கமர்த்தலின் பிரதான மூலக்கூறுகளை **விபரிக்குக.** (10 புள்ளிகள்)

பிரிவு *B* முடிவு

# <u>பிரிவு C</u>

இந்தப் பிரிவிலுள்ள இரண்டு (02) வினாக்களுக்கும் விடை தருக.

(மொத்தம் 50 புள்ளிகள்)

## வினா 08

(A) **வரையறுக்கப்பட்ட SSI (தனியார்) கம்பனி**யானது ஏற்றுமதிச் சந்தைக்கு காலணிகளை உற்பத்தி செய்வதில் ஈடுபட்டுள்ளது. அது தற்போது 300 தொழிற்சாலை ஊழியர்களை வேலைக்கு அமர்த்தியுள்ளது. ஒவ்வொரு ஊழியருக்கும் வரவினைப் பதிவுசெய்வதற்கு துளையிடல் அட்டை ஒன்று வழங்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு வேலைநேர ஆரம்பத்திலும் முடிவிலும் இந்தத் துளையிடல் அட்டை நேரப்பதிவு எந்திரத்தினூடாக இழுக்கப்படுதல் வேண்டும். எனினும், இந்தச் செயன்முறை முற்றுமுழுக்க சுய இயக்கத்திற்கு உள்ளாவதால், எவரும் நேரத்தில் மாற்றங்களைச் செய்ய முடியாது ஆகையால் இதனை எந்த அலுவலரும் மேற்பார்வை செய்வதில்லை.

கம்பனியின் எல்லாப் புது நியமனங்களும் மனிதவள (HR) பிரிவினால் மேற்கொள்ளப்படுவதுடன், புதிய ஊழியர்கள் மனித வள நிறைவேற்று அலுவலரினால் சம்பளப் பட்டியலில் உட்படுத்தப்படுவர்.

மேலதிக நேர வேலை (OT) கொடுப்பனவுகள் சம்பளப்பட்டியல் முறைமையினால் கணிப்பிடப்பட்டு கொடுப்பனவுகள் மாதத்தில் இரு தடவைகள் செலுத்தப்படும். மேலதிகநேரக் கொடுப்பனவுகள் செலுத்தப்பட்ட பின்னர் மேலதிகநேர வேலை அறிக்கைகள் செம்மை பார்ப்பதற்காக உற்பத்தி மேற்பார்வையாளருக்கு அனுப்பப்படும்.

ஊழியர்களுக்கான வருகை உபகாரக் கொடுப்பனவு (attendance bonus) அவர்களின் வரவுப் பதிவுகளின் அடிப்படையில் செலுத்தப்படும். செலுத்தவேண்டிய தொகை உற்பத்தி மேற்பார்வை யாளரால் தீர்மானிக்கப்பட்டு, சம்பளப் பட்டியல் எழுதுநரால் அத்தொகைகள் சம்பளப்பட்டியல் முறைமையில் பதிவுசெய்யப்படும்.

தொழிற்சாலையின் எல்லா ஊழியர்களுக்கும் சம்பளம் காசாக சம்பளப் பட்டியல் எழுதுநரால் சம்பளப் பக்கற்றுகளாக விநியோகிக்கப்படும். அவர் சகல தொழிற்சாலை ஊழியர்களையும் தனிப்பட்ட ரீதியில் தெரிந்திருப்பதனால் தாம் வழங்கும் சம்பளக் கொடுப்பனவுகளுக்கு கையெழுத்திட்ட ஏற்பனவுப் பத்திரத்தைப் பெறுவதில்லை.

**நீங்கள் செய்யவேண்டியவை,**

(a) மேலே விபரிக்கப்பட்ட சம்பளப்பட்டியல் முறைமையில் காணப்படும் அகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் நான்கினை (04) **இனங்காண்க.** (04 புள்ளிகள்)

(b) மேலே (a) யின் இனங்காணப்பட்ட ஒவ்வொரு பலவீனத்திலிருந்தும் **SSI** இன் முகாமை எவ்வாறு விடுபட முடியும் என்பதற்கு ஒவ்வொரு பரிந்துரை **கூறுக.** (04 புள்ளிகள்)

(c) கணினிமயப்படுத்தப்பட்ட சம்பளப்பட்டியல் முறைமையைப் பிரயோகிப்பதுடன் தொடர்புபட்ட முக்கிய இடர்கள் இரண்டினை (02) **கூறுக.** (02 புள்ளிகள்)

(d) (i) சம்பளப்பட்டியல் முறைமையில் உட்படுத்தப்பட்ட மற்றும் பதிவுசெய்யப்பட்ட தகவல்களைப் பலப்படுத்திப் பாதுகாப்பதற்கு **SSI** கம்பனியின் முகாமையினால் தாபிக்கக்கூடிய மூன்று (03) பொதுக்கட்டுப்பாடுகளை (general controls) **இனங்காண்க.** (03 புள்ளிகள்)

(ii) சம்பளப்பட்டியல் முறைமையில் உட்படுத்தப்பட்ட மற்றும் பதிவுசெய்யப்பட்ட தகவல்களைப் பலப்படுத்திப் பாதுகாப்பதற்கு **SSI கம்பனி**யின் முகாமையினால் தாபிக்கக்கூடிய இரண்டு (02) பிரயோகக் கட்டுப்பாடுகளை (application controls) **இனங்காண்க.** (02 புள்ளிகள்)

(B) **வரையறுக்கப்பட்ட பெரேரா டிரேடிங் (தனியார்) கம்பனியின்** 2016 மார்ச் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டின் கணக்காய்வுக்குப் பொறுப்பான சிரேட்ட அலுவலர் **சமீரா.** 2016 மார்ச் 31 மற்றும் 2015 மார்ச் 31 ஆகிய திகதிகளில் முடிவடைந்த ஆண்டுகளுக்கான நிதிக் கூற்றுக்களிலிருந்து கீழ்வரும் மீதிகள் பிரித்தறியப்பட்டன :

| | **2016 (ரூ.)** | **2015 (ரூ.)** |
|---|---|---|
| விற்பனை | 1,005,630 | 700,250 |
| விற்பனைக் கிரயம் | (553,000) | (357,120) |
| **மொத்த இலாபம்** | **452,630** | **343,130** |
| ஆதனம், பொறி மற்றும் உபகரணம் - கிரயத்தில் | 8,000,000 | 500,000 |
| வியாபாரக் கடன்பட்டோர் | 209,500 | 116,700 |
| வங்கிக் கடன் | 350,000 | 500,000 |

(1) கம்பனியில் கடன்பட்டோர் 5 வாடிக்கையாளர்கள் மாத்திரமே. இதில் ஒரு கடன்பட்டோ னிடமிருந்து வருமதியாக இருந்த தொகை அறவிடமுடியாக் கடனாக பதிவழிக்கப்பட்டுள்ளது. பின்னைய தீர்ப்பனவுகளை செவ்வை பார்ப்பதற்காக **சமீரா** 3 கடன்பட்டோரைத் தெரிவு செய்ததுடன், அவர்கள் எவரும் தமது மீதிகளை பின்னர் செலுத்தியிருக்கவில்லை.

(2) **சமீரா** ஆதனம், பொறி மற்றும் உபகரணம் பற்றிய பூர்வாங்கப் பகுப்பாய்வு மீளாய்வின்போது எந்திரங்களில் கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ளதை அவதானித்தார்.

(3) வங்கிக் கடனுக்கான கடன் உடன்படிக்கையை **சமீரா** செவ்வை பார்த்துள்ளார்.

***நீங்கள் செய்யவேண்டியவை,***

(a) மேலே (1) முதல் (3) வரையில் குறிப்பிடப்பட்ட உருப்படிகள் தொடர்பில் போதிய, பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெறுவதற்கு ஒவ்வொன்றிற்கும் **சமீரா** மேற்கொள்ள வேண்டிய இரண்டு (02) மேலதிகக் கணக்காய்வு விதிமுறைகளை ***இனங்காண்க.*** (06 புள்ளிகள்)

(b) நிதிக்கூற்றுக்களிலிருந்து பிரித்தறியப்பட்ட தகவல்களின் அடிப்படையில் வியாபாரக் கடன்பட்டோர் மற்றும் மொத்த இலாபம் ஒவ்வொன்றிற்கும் ஒரு பகுப்பாய்வு விதிமுறையை (analytical procedure) ***இனங்காண்க.*** (02 புள்ளிகள்)

(c) ஆண்டின் இறுதி நிதிக் கூற்றுக்களில் கணக்கு மீதிகள் பற்றிய இரண்டு (02) உறுதிப்பாடுகளை (assertions) ***கூறுக.*** (02 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

## வினா 09

(A) பண்ணை உற்பத்திப் பொருட்களை உற்பத்திசெய்து விற்பனை செய்வதில் ஈடுபட்டுள்ள 3 துணைக் கம்பனிகளைக் கொண்ட **வரையறுக்கப்பட்ட அம்பத்தலே டெயறி புரொடக்ஸ் (தனியார்) கம்பனியின் (ADP)** கணக்காய்வுக்கான சிரேட்ட அலுவலராக நீர் நியமிக்கப்பட்டுள்ளீர். **ADP** ஆனது உமது நிறுவனத்தின் ஒரு புதிய வாடிக்கையாளராகும்.

கம்பனியின் கணக்காளர் ஆண்டின் இறுதியிலிருந்து 2 மாதங்களுக்கு முன்னர் வேலைக்கு அமர்த்தப் பட்டுள்ளார். இந்தக் கணக்காளர் இந்த ஆண்டின்போது கணக்காளர் பதவிக்குச் சேர்க்கப்பட்ட மூன்றாவது நபராகும். அத்துடன், தற்போதைய கணக்காளர் தொழில்சார் தகைமைபெற்ற (professionally qualified) நபர் அல்ல.

**ADP**யின் தொழிற்றுறையில் ***ரீமோ*** எனப்படும் புதிய போட்டியாளர் பிரவேசித்துள்ளதாக சந்தைப்படுத்தல் முகாமையாளர் தெரிவித்துள்ளார். ***ரீமோ,*** விளம்பரப்படுத்தல் மற்றும் விற்பனை ஊக்குவிப்புக்கு அதிக பணத்தை முதலிட்டு கணிசமான சந்தைப் பங்கினைப் பிடித்துள்ளது. அதன் காரணமாக **ADP** யின் பொருட்களுக்கான கேள்வி பாரிய அளவில் வீழ்ச்சியடைந்து வருகின்றது.

உறவுமுறைத் தரப்பினர் ஊடுசெயல்களை (related party transaction) ஆராய்ந்தபோது ஆண்டின் இறுதியில் கணிசமான அளவு கம்பனிகளுக்கு இடையிலான விற்பனை (inter-company sales) மேற்கொள்ளப்பட்டிருந்தமையை நீர் அவதானித்துள்ளீர். உரிய உறவுமுறைத் தரப்பினரிடமிருந்து மீதிகளை உறுதிப்படுத்தும் கடிதங்கள் நேரடியாக பெறப்பட்டதுடன், அவை பேரேட்டு மீதிகளுடன் இணங்கியிருந்தன.

கொடுப்பனவுகளை மீளாய்வு செய்தபோது, கணிசமான பல கொடுப்பனவுகள் வழக்கறிஞர் ஒருவருக்கு செலுத்தியிருப்பதனை நீர் அவதானித்துள்ளீர். எனினும், இந்தக் கொடுப்பனவுகளுக்கு சான்றுபகரும் ஆவணங்கள் கிடைத்துள்ளன.

கணக்குப் பிரிவில் கணக்கு நிறைவேற்று அதிகாரியொருவர் உள்ளார். அவர் பிரதேச பண்ணையாளர்களிடமிருந்து பால் சேகரிப்பு மற்றும் அந்தப் பண்ணையாளர்களுக்கு பணம் செலுத்துதல் ஆகியவற்றுக்குப் பொறுப்பாக உள்ளார்.

**நீங்கள் செய்யவேண்டியவை,**

(a) ''கணக்காய்வு இடர் (audit risk)'' என்பதன் கருத்தினை **விபரிக்குக.** (02 புள்ளிகள்)

(b) நீர் **ADP** மற்றும் அதன் சூழல் தொடர்பான விளக்கத்தினைப் பெறவேண்டிய மூன்று (03) பகுதிகளை **நிரற்படுத்துக.** (03 புள்ளிகள்)

(c) **ADP** யின் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது கவனத்திற்கொள்ள வேண்டிய கணிசமான இடர்களைக் காட்டும் நான்கு (04) பகுதிகளை **விபரிக்குக.** (08 புள்ளிகள்)

(d) **ADP** யின் நிரந்தரக் கணக்காய்வுக் கோப்பில் (permanent audit file) நீர் உள்ளடக்கும் இரண்டு (02) வகையான தகவல்களை **நிரற்படுத்துக.** (02 புள்ளிகள்)

(B) நீர் **வரையறுக்கப்பட்ட MN (தனியார்) கம்பனியின்** கணக்காய்வுக்குப் பொறுப்பான சிரேட்ட அலுவலராவீர். **MN கம்பனி** அதன் காணிகளை அளவிட மீள்மதிப்பீட்டு முறையினைக் கடைப்பிடிக் கின்றது. மீள்மதிப்பீடு செய்து 5 ஆண்டுகளின் பின்னர் காணிகளின் பெறுமதி கணிசமாக அதிகரித் திருப்பதனை முகாமை அறிந்துள்ளது. எனவே, முகாமை நடப்பு ஆண்டில் மற்றுமொரு மீள் மதிப்பீட்டினை மேற்கொண்டது. காணிகளின் மதிப்பு **AB** மதிப்பீட்டாளர்களால் மேற்கொள்ளப்பட்டது. மதிப்பீட்டு அறிக்கையின் ஒரு பிரதி உமக்குத் தரப்பட்டுள்ளது.

கம்பனி கட்டடங்களை அளவிடுவதற்கு கிரய முறையினை (cost model) பயன்படுத்துகிறது. ஒரு கட்டடம் வெள்ளத்தின் காரணமாக பகுதியாகச் சேதமடைந்துள்ளது. இதன் காரணமாக கம்பனி சேத இழப்பிற்காக ஒரு ஏற்பாட்டினைச் செய்துள்ளது. இந்த சேத இழப்பு ஏற்பாடு தொடர்பில் நீர் முகாமையிடமிருந்து பிரதிநிதித்துவப்படுத்தலை (representation) பெற்றுள்ளீர்.

**நீங்கள் செய்யவேண்டியவை,**

(a) காணிப் பெறுமதியினை மீளாய்வு செய்யும்போது மேற்கொள்ளப்பட வேண்டிய இரண்டு (02) கணக்காய்வு விதிமுறைகளை **நிரற்படுத்துக.** (04 புள்ளிகள்)

(b) ''முகாமையிடமிருந்து எழுத்துமூலமான பிரதிநிதித்துவம்'' (a written representation by management) என்பதன் கருத்தினைக் **குறிப்பிடுக.** (02 புள்ளிகள்)

(c) ஒரு கணக்காய்வுச் சான்றாக முகாமைப் பிரதிநிதித்துவப்படுத்தலின் தரம் மற்றும் நம்பகத் தன்மையை **ஆராய்க.** (04 புள்ளிகள்)

(மொத்தம் 25 புள்ளிகள்)

*பிரிவு C முடிவு*

# செயல் வினைச்சொல் பட்டியல்

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வரைவிலக்கணம் (பொருள் வரையறை) |
|---|---|---|
| **மட்டம் 01**<br>**கிரகித்தல்**<br><br>முக்கிய தகவலை ஞாபகப்படுத்தி விபரித்தல் | **பொருள் வரைறை செய்க / வரைவிலக்கணம் செய்க (Define)** | தன்மை, வியாபகம் அல்லது பொருள் பற்றி விபரித்தல் |
| | **வரைக (Draw)** | வரிப்படம் அல்லது வரைபடம் வடிவில் வரைந்து காட்டுதல் |
| | **அடையாளங் காண்க / இனங்காண்க (Identify)** | கருத்திற்கொண்ட பின்னர் தெரிந்து கொள்ளல் அல்லது தெரிவு செய்தல் |
| | **நிரற்படுத்துக / பட்டியலிடுக (List)** | தொடர்புபட்ட உருப்படிகளை ஒன்றின் கீழ் ஒன்றாக எழுதுதுல் |
| | **தொடர்புபடுத்துக (Relate)** | தர்க்க ரீதியாக அல்லது காரண ரீதியாக தொடர்புகளை நிலைநாட்டல் |
| | **கூறுக / குறிப்பிடுக (State)** | திட்டவட்டமாக அல்லது தெளிவாக தெரிவித்தல் |
| | **கணிக்குக / கணிப்பிடுக (Calculate / Compute)** | கணித ரீதியாக கணிப்பீட்டினை மேற்கொள்ளல் |
| | **ஆராய்க (Discuss)** | முடிவொன்றினை அடையும் நோக்கில் வேறுபட்ட விடயங்களை விவாதத்தின் மூலம் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **விபரிக்குக (Explain)** | உரிய உண்மைகளை வெளிக்காட்டி, தெளிவான விவரணத்தை விபரமாகத் தெரிவித்தல் |
| | **பொருள் விளக்குக / கருத்துக் கூறுக (Interpret)** | விளங்கிக் கொள்ளக்கூடிய வகையில் தெளிவுபடுத்தல் |
| | **ஏற்பிசைவு செய்தல் (Recognize)** | அறிவை அல்லது அவை சார்ந்த அனுபவத்தினைக் கொண்டு, செல்லுபடித் தன்மையை அல்லது அதன் இல்லாமையைக் காட்டுதல் |
| | **பதிவு செய்க (Record)** | உரிய பதிவுகளை விரிவாகப் பதிவு செய்தல் |
| | **தொகுக்குக / சுருக்கத்தைத் தருக (Summarize)** | பிரதான விடயங்களில் (உண்மைகள் அல்லது பெறுமதிகள்) சுருக்கமான கூற்றினைத் தருதல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 02**<br>**பியோகித்தல்**<br><br>கற்றதைக் கொண்டு வேறு ஒன்றினை அறிவதற்கு அறிவைப் பயன்படுத்துதல் / வினாக்களைத் தீர்த்தல் | **பிரயோகிக்குக (Apply)** | நடைமுறைப் பயன்பாட்டிற்குக் கொண்டு வருதல் |
| | **மதிப்பிடுக (Assess)** | பெறுமதி, தன்மை, இயலுமை அல்லது தரத்தினைத் தீர்மானித்தல் |
| | **எடுத்துக் காட்டுடன் விபரிக்குக (Demonstrate)** | விசேடமாக உதாரணங்களுடன் நிறுவுதல் |
| | **வரைபடத் தாளில் வரைக (Graph)** | வரைபடம் ஒன்றின் மூலம் காட்டுதல் |
| | **தயாரிக்குக (Prepare)** | கேட்கப்பட்ட விடயத்தினை உரிய முறையில் வெளிக்காட்டல் |
| | **முன்னுரிமைப்படுத்துக (Prioritize)** | முக்கியத்துவத்தின் அடிப்படையில் ஒழுங்கு படுத்துதல் அல்லது வரிசைப்படுத்துதல் |
| | **கணக்கிணக்கம் செய்க / இணக்கம் செய்க (Reconcile)** | வேறொன்னுடன் இணங்குதலை ஒப்புவித்தல் |
| | **தீர்க்குக (Solve)** | கணிப்பீடு அல்லது விளக்கங்களின் மூலம் தீர்வு காணல் |

| அறிவு மட்டம் | வினைச்சொல் பட்டியல் | வினைச்சொல் வரைவிலக்கணம் |
|---|---|---|
| **மட்டம் 03**<br>**பகுப்பாய்வு**<br><br>எண்ணங்களுக்கு இடையில் தொடர்புகளை ஏற்படுத்தி ஒப்பிடுதலும் வேறுபடுத்தலும் / திறந்த வினாக்களைத் தீர்த்தல் | **பகுப்பாய்வு செய்க (Analyze)** | தீர்வினை அல்லது வெளிப்பாட்டினைத் தெரிந்து கொள்ளும் நோக்கில் விபரமாக ஆய்வு செய்தல் |
| | **ஒப்பிடுக (Compare)** | ஒற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **வேறுபடுத்துக (Contrast)** | வேற்றுமைகளை அறிந்து கொள்ளும் நோக்கில் பரீட்சித்தல் / ஆய்வு செய்தல் |
| | **பேதப்படுத்துக/வித்தியாசப்படுத்துக /வகையிடுக (Differentiate)** | சிலவற்றை வேறுபடுத்தும் வித்தியாசங்களைக் காட்டுதல் / வகைப்படுத்தல் |
| | **சுருக்கமாகக் காட்டுக / குறிப்பிடுக (Outline)** | முக்கிய குணாம்சங்களின்/சிறப்பியல்புகளின் தொகுப்பினைத் தருதல் |